# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

ஆணை நாள் 03.06.2026

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13358/B/2025**

திரு.M.இராதாகிருஷ்ணன் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பு
தோட்டக்கலை உதவி இயக்குநுர்(நடவுப்பொருள்),
தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்,
ஜாகீர்அம்மாபாளையம் அஞ்சல்,சேலம் - 636 302.

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (03.06.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.M.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.கு.குருமூர்த்தி ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் திரு.பெ.சக்ரவர்த்தி, தோட்டக்கலை உதவி இயக்குநர்(ந.பொ)(பொ) அவர்களுக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்றும், அவர் சார்பாக தான் ஆஜராக அனுமதிக்குமாறு கோரி ஒப்புதல் கடிதத்தை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். இதனை இவ்வாணையம் பதிவு செய்கின்றது.

2. மனுதாரர் 03.09.2025 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (03.06.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 05.06.2025 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், 2023-23024 மற்றும் 2024-2025 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பாக அட்டவணையில் கண்டுள்ளபடி வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 15.07.2025 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தான் கோரிய தகவல்கள் நாளதுவரை வழங்கப்படவில்லை என்றும், உரிய தகவல்களை அளிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்தார்.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மனுதாரர் பொது அதிகார அமைப்பின் இருப்பில் உள்ள ஆவணங்களை கோராமல், அட்டவணையிட்டு தகவல்களை கோரியதால், 10.07.2025ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, தகவல்களை உருவாக்கி தர தகவல் உரிமைச் சட்டத்தில் வழிவகை இல்லை என்று

தெரிவித்துள்ளதாகவும், அதனை தொடர்ந்து மனுதாரர் தாக்கல் செய்த முதல் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், முதல் மேல்முறையீட்டு அலுவலர் 21.11.2025ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக, மனுதாரர் கோரிய தகவல்களை அளித்துள்ளதாகவும் எடுத்துரைத்து, ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

5. விசாரணையில் ஆஜரான மனுதாரர், மேற்படி 21.11.2025ம் தேதியிடப்பட்ட கடிதம் தனக்கு கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மேற்படி தகவல்கள் மனுதாரருக்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்டு, மனுதாரர் தகவல்களை பெற்றுக்கொண்டதற்கன ஒப்புகை அட்டை வரப்பெற்றுள்ளது என்று தெரிவித்து அதனை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார். ஒப்புகை அட்டையில் அறப்போர் இயக்கம் என முத்திரை(Seal) பதியப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது குறித்து மனுதாரரிடம் வினவியபோது, மனுதாரர் மேற்படி முத்திரை தன்னுடையது அல்ல என்றும், தான் கையொப்பமிட்டு தகவல்கள் பெறவில்லை என்றும், தன்னுடைய மனுவில் எங்கும் தான் அறப்போர் இயக்கம் என்று குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்ததன் அடிப்படையில், மனுதாரர் இவ்வாணையத்தில் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனு பரிசீலனை செய்கைவில், மனுதாரர் சட்டப்பிரிவு 6(1)மனு, 19(1)கீழான முதல் மேல்முறையீட்டு மனு மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டு மனு அனைத்திலும், அவருடைய பெயரை தொடர்ந்து அறப்போர் இயக்கம் என குறிப்பிட்டுள்ளது மனுதாரருக்கு காண்பிக்கப்பட்டது. மேலும் மனுதாரரிடம் தாங்கள் தெரிவிக்கும் குற்றச்சாட்டு குறித்து மேற்படி ஒப்புகை அட்டை யாரிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது? என்று பெறப்பட்டது? உரிய நபரிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளதா? என்பது குறித்து இக்கடிதத்தை சார்வு செய்து கையொப்பம் பெற்ற அஞ்சலக ஊழியரை விசாரணை செய்வது சம்மந்தமாக அஞ்சல்துறை சார்ந்த உயர் அதிகாரிகளுக்கு இவ்வாணையம் உத்தரவிட்டு, மேற்படி மனுதாரரின் குற்றச்சாட்டின் உண்மைநிலையினை ஆராய்ந்து, அதுகுறித்த நடவடிக்கை மேற்கொள்ள இவ்வாணையம் தீர்மானம் செய்வதாக மனுதாரரிடம் தெரிவித்தநிலையில், மனுதாரர் உடனடியாக தன்னுடைய குற்றச்சாட்டினை பதிவு செய்ய கால அவகாசம் வேண்டுமென்று தெரிவித்து, பொது அதிகார அமைப்பின் மேல் சுமத்திய குற்றச்சாட்டு குறித்து அதன்பின்பு எவ்வித கருத்தையும் தெரிவிக்காமல் பின்வாங்கினார். இதனை இவ்வாணையம் பதிவு செய்கின்றது. மனுதாரரின் இச்செயல் அவர் வேண்டுமென்றே பொது அதிகார அமைப்பின் மீது, எவ்வித ஆதாரமுமின்றி குற்றம்சாட்டியுள்ளார் என்பது புலப்படுகின்றது.

6. தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்று மனுதாரர் தெரிவித்ததை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தகவல்கள் விசாரணையின்போது, மனுதாரருக்கு நேரில் வழங்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட மனுதாரர், போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

7. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதியிடம், மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பான. நடவுசெடிகளின் பெயர்கள், கொள்முதல் செய்யப்பட்ட எண்கள், கொள்முதல் செய்யப்பட்ட அரசு/தனியார் நிறுவனம் பற்றிய தகவல்கள்,அதற்கான செலவிடப்பட்ட தொகை விவரம், தொகை செலுத்தப்பட்ட முறை ஆகியவவை தங்கள் பொது அதிகார அமைப்பின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனவா என கேட்டறிந்தபோது, பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி இதுகுறித்து தனக்கு எவ்வித விவரமும் தெரியாது என்று தெரிவித்தார். பொது அதிகார அமைப்பினைச் சார்ந்த அரசு அலுவலர்கள், தங்கள் துறைச் சார்ந்த அனைத்து விவரங்களையும் பொது வெளியான தங்களது இணையதளத்தில் பதிவேற்றம் செய்தாலே, தகவல்கள் வேண்டி மக்களால் தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலமாக சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் வெகுவாக குறைந்துவிடும் என்று இவ்வாணையம் கருதுகின்றது.

8. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படகின்றது:-

1. *தகவல்கள் பொறுத்தமட்டில் இன்றைய விசாரணையின்போது மனுதாரருக்கு தகவல்கள் நேரடியாக வழங்கப்பட்டு, மனுதாரரும் வழங்கப்பட்ட தகவல்கள் போதிய தகவல்கள் என்று ஏற்பளிப்புச் செய்ததன் அடிப்படையில், இவ்வழக்கு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகின்றது.*
2. *தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 4(1)(a)படி பொது அதிகார அமைப்பு அரசு ஆவணங்களை பட்டியலிட்டு பேண வேண்டும் என்பது கட்டாயம். அரசு அமைப்பிற்கு இருப்பிலுள்ள பொருளாதார நிலையை முன்னிட்டு இவ்வாவணங்களை கணினிமயமாக்கவோ, வலைதளத்தில் வெளியிடவோ செய்யலாம் என்று சட்டப்பிரிவு 4(1)(a) தெளிவாக்குகிறது. இது பொது அதிகார அமைப்பிற்கு வழங்கப்பட்ட ஒரு வழிகாட்டுதலாகும். அதை நிறைவேற்றுவது பொது அதிகார அமைப்பின் கடமையாகும். தகவல் பெறும் உரிமைச் சட்டத்தில் 4(1)(b)(vi) என்பது தங்கள் அலுவலகத்தில் எந்தெந்த ஆவணங்கள் பராமரிக்கப்படுகிறது என்பதை ஒரு பொது அதிகார அமைப்பு பட்டியலிட்டு வைக்க வேண்டும் என்றுள்ளது. ஆவணங்கள் இருப்பில் இருந்து, அதனை பட்டியலிடாது போயின் அது பொது அதிகார அமைப்பின் குறைபாடாகவே கருதப்பட்டு உடனடியாக அதனை சரிசெய்ய வேண்டிய நடவடிக்கையை எடுத்து, தங்கள் பொது அதிகார அமைப்பில் பராமரிக்கக்கூடிய அலுவலகம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் குறித்த விவரங்கள், பணியாற்றும் பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி விவரங்கள், வருவாய் மற்றும் ஊராட்சி துறைகளில், மக்கள் நல பணிகளுக்காக அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி தொடர்பான விவரங்கள், உதவித்தொகைத் திட்டங்கள் நிறைவேற்றும் முறை, திட்டங்கள் மேற்கொள்ள கருதப்பட்ட செலவினங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்டவை பற்றிய விவர அறிக்கைகள், நலதிட்டங்களுக்காக தேர்ந்தெடுக்கப்படும் பயணாளிகளின் விவரங்கள், தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வழிமுறைகள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் ஆகியவை பதிவேற்றம் செய்யப்பட்டிருக்கவேண்டும். பட்டா, சிட்டா, அடங்கள் போன்ற ஆவணங்களை பொது மக்கள் பெறுவதற்கு சமர்ப்பிக்கவேண்டிய ஆவண விவரங்கள் மற்றும் இதர சான்றுகள் பெறுவதற்கான வழிமுறைகள் ஆகியவற்றை பொது அதிகார அமைப்பின் இணையதளத்தில் கட்டாயமாக பதிவேற்றம் செய்யவேண்டும்.*
3. உச்ச நீதிமன்ற வழக்கு எண். **"W.P.(Civil) No.990 of 2021 dt:17.08.2023, KISHAN CHAND JAI Vs UNION OF INDIA & ORS. (பத்தி 2, 25 மற்றும் 26)**

   ***பத்தி 2*** - பிரிவு 4(1)-ன் கீழ் பொது அதிகார அமைப்புகளுக்கான சட்டரீதியான கடமைகள் பின்வருவனவற்றுடன் தொடர்புடையவை: (அ) தகவல்களை எளிதாக அணுகும் வகையில் முறையாகப் பட்டியலிடப்பட்டு குறியீட்டு முறைப்படுத்தப்பட்ட அனைத்துப் பொது ஆவணங்களையும் பராமரித்தல்; (ஆ) நிறுவன அமைப்பு, அலுவலர்களின் பணிகள் மற்றும் கடமைகள், முடிவெடுப்பதற்கான நடைமுறைகள், ஊதிய அமைப்பு, நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்களை வெளியிடுதல்; அத்துடன் கொள்கைகள் மற்றும் அறிவிப்புகள் தொடர்பான தகவல்களை வெளியிடுதல். உட்பிரிவு (2)-ஆனது, உட்பிரிவு (1)-ன் பிரிவு (ஆ)-வில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களைத் தாமாகவே

முன்வந்து (suo motu) வழங்குவதற்கும், அத்தகவல்களைப் பொதுமக்கள் எளிதாக அணுகும் வகையில் பரவலாகக் கொண்டு சேர்ப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது அதிகார அமைப்பைப் பணிக்கிறது.

***பத்தி - 25*** பிரிவு 4-ன் கீழ் பொது அதிகார அமைப்புகளுக்கு உள்ள கடமைகளின் பின்னணியில், பிரிவு 3-ன் கீழ் சட்டத்தால் நிறுவப்பட்டுள்ள 'தகவல் அறியும் உரிமை'யைக் கருத்தில் கொள்ளும்போது, 'உரிமை பெற்றவர்கள்' மற்றும் 'கடமைப்பட்டவர்கள்' ஆகியோருக்கு இடையிலான உறவை 'பொறுப்புக்கூறல்' (accountability) என்ற கோட்பாடு வழிநடத்தினால் மட்டுமே இச்சட்டத்தின் நோக்கமும் குறிக்கோளும் முழுமையாக நிறைவேறும் என்று நாங்கள் கருதுகிறோம். இச்சட்டத்தின் அத்தியாயங்கள் III மற்றும் IV-ன் கீழ் சட்டரீதியான அங்கீகாரம் பெற்றுள்ள மத்திய மற்றும் மாநில தகவல் ஆணையங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன; மேலும், அவற்றின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் இச்சட்டத்தின் பிரிவு 18-ல் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. மத்திய மற்றும் மாநில தகவல் ஆணையர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'கண்காணித்தல் மற்றும் அறிக்கை அளித்தல்' (Monitoring and Reporting) எனும் சிறப்பு அதிகாரத்தையும் நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்; 'ஒவ்வொரு பொது அதிகார அமைப்பின் செயல்பாட்டிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை ஊக்குவித்தல்' என்ற இச்சட்டத்தின் நோக்கத்தையும் குறிக்கோளையும் மனதில் கொண்டே இந்த அதிகாரம் செயல்படுத்தப்பட வேண்டும்.

***பத்தி - 26*** மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக, இச்சட்டத்தின் பிரிவு 4-ல் உள்ள விதிமுறைகள் மற்றும் 'பணியாளர் மற்றும் பயிற்சித் துறை' (Department of Personnel and Training) அவ்வப்போது வெளியிடும் வழிகாட்டுதல்கள் மற்றும் குறிப்பாணைகளில் (Memorandums) குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் ஆகியவை செயல்படுத்தப்படுவதை, மத்திய தகவல் ஆணையம் மற்றும் மாநில தகவல் ஆணையங்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று நாங்கள் உத்தரவிடுகிறோம். இந்த உத்தரவுகளில், மேற்படி துறையால் 07.11.2019 அன்று வெளியிடப்பட்ட அலுவலகக் குறிப்பாணையில் (O.M.) உள்ள அறிவுறுத்தல்களும் அடங்கும். இதற்காக, இச்சட்டத்தின் விதிகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது அதிகார அமைப்புகளுக்குப் (public authorities) பரிந்துரைகளை வழங்கும் அதிகாரமும் ஆணையர்களுக்கு உண்டு; இப்பரிந்துரைகள் சட்டத்தின் பிரிவு 25-ன் உட்பிரிவு (5)-ன் கீழ் வழங்கப்படும்.

4. மேற்கண்ட தீர்ப்பின் பத்தி 26-இன் படி, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 4-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆணைகளை பொது அதிகார அமைப்புகள் செயல்படுத்துவதை மத்திய தகவல் ஆணையமும், மாநில தகவல் ஆணையங்களும் கண்காணிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை பொது அதிகார அமைப்பு, மனுதாரர் கோரும் தகவல்கள் உட்பட தங்கள் துறை சார்ந்த அனைத்து திட்டங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் மக்களுக்காக செயல்படுத்தப்படும் நலத்திட்ட பணிகள் குறித்த அனைத்து விவரங்களையும் விரைவில் தங்களது வலைதளத்தில் வெளியிட வேண்டும் என்று இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

5. *இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரின் பிரதிநிதி, மேற்படி தகவல்கள் தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனவா? இல்லையா? என்பது குறித்த விவரம் எதனையும் ஆணையத்தின் முன்பு தெரிவிக்காத நிலையில், தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பிர்கள் துறை இணையதளத்தில் என்னென்ன விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்த விரிவான அறிக்கையினை மேல்முறையீட்டு அலுவலர்/தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்துறை அலுவலகம், சென்னை அவர்களும், முதல்மேல்முறையீட்டு அலுவலர்/ தோட்டக்கலை துணை இயக்குநர், ஜாகீர் அம்மாவாளையம், சேலம் அவர்களும், பொதுத் தகவல் அலுவலர்/தோட்டக்கலை உதவி இயக்குநர்(ந.பொ), தோட்டக்கலைதுணை இயக்குநர் அலுவலகம், சேலம் மாவட்டம் அவர்களும் இவ்வாணையத்தில் 15.07.2026 முற்பகல் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 13358/B/2024**

**பெறுநர்**

மேல்முறையீட்டு அலுவலர்,
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
3வது தளம், விவசாய வளாகம்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை - 600 005.

மேல்முறையீட்டு அலுவலர்,
தோட்டக்கலை உதவி இயக்குநர்(நடவுப்பொருள்),
தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்,
ஜாகீர்அம்மாபாளையம் அஞ்சல்,
சேலம் - 636 302.

பொதுத் தகவல் அலுவலர்,
தோட்டக்கலை உதவி இயக்குநர்(நடவுப்பொருள்),
தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகம்,
ஜாகீர்அம்மாபாளையம் அஞ்சல்,
சேலம் - 636 302.

திரு.M.இராதாகிருஷ்ணன்,
எண்.07, சத்யா பிளாசா, 2வது தளம்,
டாக்டர் திரு.மூர்த்தி நகர் பிரதான சாலை,
நுங்கம்பாக்கம்,சென்னை - 600 034.

Copy to: File
Sj/Ps- 15/06/2026

சட்டம் 2005
அறியும் உரிமை